# தாமான் ரிம்பா கியாரா

# பசுமைப் பகுதியாகவே இருக்கும்

## சிகாம்புட் எம்பி திட்டவட்டம்




கோலாலம்பூர், ஜூலை 18-

தலைநகரில் உள்ள தாமான் ரிம்பா கியாரா தொடர்ந்து பசுமைப் பகுதியாக நிலைநிறுத்தப்படும் என சிகாம்புட் நாடாளுமன்ற உறுப்பினர் ஹன்னா இயோ கூறினார்.

2040ஆம் ஆண்டு வரைக்குமான கோலாலம்பூர் மேம்பாட்டு வரைதிட்டத்தில் இது பசுமைப் பகுதியாக ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சிகாம்புட்டில் உள்ள புக்கிட் கியாரா பகுதி கடந்த 2020ஆம் ஆண்டில் முதன் முறையாக பசுமைப் பகுதி கொண்ட பூங்காவாக அறிவிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எனவே அங்குள்ள மக்களும் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் அப்பகுதியில் மேம்பாட்டுத் திட்டங்களைக் கொண்டு வருவதைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார். அப்பகுதியில் மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் செய்திருந்த பரிந்துரையை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கூட்டரசு நீதிமன்றம் நிராகரித்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தாமான் ரிம்பா கியாராவில் இருந்து 4 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட நீண்ட வீடுகள் தொடர்ந்து நிலைநிறுத்தப்பட வேண்டும் என அமைச்சரவை முடிவு செய்ததாகக் கூறிய அவர், அங்கு வேறு திட்டங்கள் ஏதும் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படாது என திட்டவட்டமாக தெரிவித்தார்.